பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 102

07.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் கைது

புகார்தாரர் டாக்டர். கணேஷ், செங்கம் தாலுகா, திருவண்ணாமலை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் புதிதாக மருத்துவமனை / கிளினிக் தொடங்குவதற்காக தடையில்லா சான்றிதழ் வேண்டி உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து தடையில்லா சான்றிதழ் வழங்க திரு.சரவணன், உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருவண்ணாமலை பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 07.10.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.சரவணன், உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் அவர்கள் ரூ.10,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 102
07.10.2026

ASSISTANT DISTRICT FIRE OFFICER ARRESTED FOR BRIBE

The complainant, Dr.Ganesh, residing at Chengam Taluk, Thiruvannamalai District, had applied for No Objection Certificate for his proposed clinic / hospital. The Assistant District Fire Officer, Thiruvannamalai district, Tr.B.Saravanan, demanded a bribe of Rs.10,000 from the complainant for issuing No Objection Certificate. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Thiruvannamalai detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (07.10.2026). During trap proceedings, Tr.B.Saravanan, Assistant District Fire Officer, demanded and accepted the bribe amount of Rs.10,000/- from the complainant. The accused was arrested and sent to judicial custody.